
மக்கள் சிந்தனை

சிறப்பாசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாசி-கார்த்திகை இதழ் 9-11



"எல்லாருக்கும் சமவாய்ப்பு அளிக்கும் வகுப்பு வேற்றுமை இல்லாத சமுதாயத்தைக் கூட்டுறவு முயற்சியால் அமைத்தல் வேண்டும். சனநாயக முறையைப் பின்பற்றி இதை நாம் அடைய வேண்டும்"

— அண்ணல் நேரு

சமய, சமுதாய, இலக்கிய திங்களிதழ்

1991

மக்கள் சிந்தனை

சிறப்பாசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

மலர் 7 இதழ் 9 to 12

திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை

அரசுடைமையா?

பொருளாதாரச் சித்தாந்தங்கள் பலவகையின. அவையாவன: தனியுடைமைப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரம், அதாவது தனியுடைமையும் உண்டு; அரசுடைமையும் உண்டு; கூட்டுடைமைகளும் உண்டு. அடுத்து அரசுடைமை மட்டுமே இருப்பது இந்த மூன்று வகைப் பொருளாதாரச் சித்தாந்தங்களில் நலம் பயப்பது கூட்டுடைமையே யாகும். தனியுடைமைச் சமுதாய அமைப்பில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அகலமாகிவிடுகின்றன. அதுமட்டுமல்லாமல் மிக மிக உயர்ந்த உழைப்பு, பண்டம் போல் விற்பனைப் பொருளாகி விடுகிறது. தனி மனிதரிடம் குவியும் செல்வம் அவரவருடைய மனப்போக்கிற்கு ஏற்ப நன்மையும் தீமையும் செய்கிறது ஆனால் தீமைதான் மிகுதி. இன்றைய இந்தியாவில் நிகழும் தீமைகளுக்குக்காரணம் தனிஉடைமையேயாம். அடுத்து அரசுடைமை. இதுவும் நலம் பயப்பதாக இல்லை என்பது படிப்பினை. நமது நாட்டில் பல பொதுத் துறை நிறுவனங்கள் இழப்பில் ஓடுகின்றன. ஏன்? தனியார் துறை இலாபத்தில் இயங்கும் போது அரசுத் துறை-பொதுத் துறை நிறுவனங்கள் இழப்பில் இயங்குவது ஏன்? தனியுடைமையில் "தன்னுடையது" என்ற உணர்வு இருப்பதைப் போல அரசுத் துறையில்-பொதுத்துறையில் 'தன்னுடைய நாடு" என்ற உணர்வு இல்லை. இந்திய மக்களில் ஏழை - பணக்காரர் படித்தவர் - படிக்காதவர் என்ற வேறுபாடின்றிப்பலரும்நாட்டுக்கு அந்நியமாகிஉள்ளனர். இஃதொரு கசப்பானவருந்தத்தக்கஉண்மை. அதனால்தான் நாட்டுடைமை வெற்றி பெறவில்லை. தனியா

ரிடம் தன்னுடைய உழைப்பைக் கட்டுப்பாட்டுடன் தரும் ஒருவன், ஏன் பொது நிறுவனத்திடமும் அதைப் போல் நடந்து கொள்ளத் தவறுகிறான்? இஃதொரு விநோதமான நடைமுறை.

கூட்டுடைமை முன் இரண்டையும்விட- தனியுடைமை, அரசுடைமை இரண்டையும்விடப் பயனுடையது. ஆயினும் இந்தக் கூட்டுறவு வாழ்க்கை முறையில் அரசு அடிக்கடி தலையிட்டுக் கெடுத்துக் கொண்டு வருகிறது என்பது உண்மை. ஆயினும் கூட்டுறவின்பால் உள்ள நம்பிக்கை இன்னமும் போய்விடவில்லை. ஏன்? பலர் கூடித் தொழில் செய்து வாழ்வதே ஒப்பற்ற அறம். மக்கள் தங்களுக்காகத் தாங்களாகவே கூடித் தாங்களாகவே ஒரு தொழிலைக் கண்டு அமைத்துக் கொண்டு தங்களுக்காகவே நடத்துவது கூட்டுறவு. கூட்டுறவில் பங்கு பெறும் மக்கள் அனைவருக்கும் பங்கு உண்டு. தனியுடைமையில் உள்ள ஒருவர் செல்வக்குவியல் முறை கூட்டுறவில் இல்லை. கூட்டுறவில் மனிதனின் உழைப்பு விற்பனைப் பொருள் அல்ல. சக்தி, ஆக்கத்திற்குப் பயன்படும் கூட்டுறவில் முதலாளி தொழிலாளி இல்லை. எல்லாரும் எல்லாம் பெறும் வாய்ப்புஉண்டு அதுமட்டுமல்ல. பலர் கூடித்தொழில் செய்வதால் தொழில் நுட்பக் கல்வி, ஆட்சிதிறன் முதலியனவும்பலரும் பெறும் வாய்ப்புடன் கூடி வாழும் பண்பும் வளர்கின்றன. ஆதலால், இந்தியாவுக்கு ஏற்ற பொருளாதாரக் கொள்கை கூட்டுடைமையேயாம். கூட்டுறவு நிறுவனங்களை, அந்நிறுவனங்களைச் சார்ந்தவர்களே ஆட்சி செய்ய வேண்டும். அரசு தலையீடு கூடாது. அவசியம் உள்ள இடத்தில் நல்ல நிர்வாகிகளை அயல் வழிப்பணியில் தந்து உதவலாம். அப்படி அயல்வழிப்பணியில் ஈடுபடுத்தப்படுபவர் அந்தக்கூட்டுறவு நிறுவனத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டவர். கூட்டுறவு நிறுவனங்களின் தணிக்கையை வேண்டுமானால் அரசுவைத்துக் கொள்ளலாம். அரசும் அந்தக்கூட்டுறவில் பங்கெடுத்தரல் நிர்வாகக் குழுவில் அரசுச் சார்பில் ஒரு பிரதிநிதியை அமைக்கலாம் கூட்டுறவு நிறுவனங்கள் தன்னாட்சி உரிமையுடையனவாக விளங்கினால்தான் நிறுவனங்களும் வளரும். மக்களும் வளர்வார்கள். அதேபோழ்து மக்களுடைய சுதந்திரமும் பாதுகாக்கப் பெறும். கூட்டுடைமைக்குள் தனியுடைமையும் உள்ளடங்கி இருப்பதால் தனியுடைமையின்பால் உள்ள ஈடுபாடு கூட்டுடைமையிலும் இருக்கும் என்பது ஓர் உளவியல் உண்மை. ஆதலால், நமது நாட்டுக்குத் தனியுடைமையைவிட, அரசுடைமையைவிடக் கூட்டுடைமைக் கொள்கையே சிறந்தது.



(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

உளோம் போகீர் என்றான்!

திருவாரூர் நினைவு சுந்தரருக்கு மேலோங்கியது; திருவாரூர் இறைவனைப் பிரிந்து வாழும் நிலையை நினைந்து வருந்துகின்றார். வாழ்க்கையின் குறிக்கோள் பத்திமை; பிறிதொன்று அடிமைத்தன்மை. இவ்விரண்டையும் இழந்த நிலையை நினைந்து வருந்துகின்றார். திருவாரூர் இறைவனைப்பிரிந்திருக்கஇயலாதமனநிலையைப்பெற்றார். தனதுதவறுகளுக்கெல்லாம் உடந்தையாய் இருந்தருளிய இறைவனின் தண்ணருளை நினைந்து நினைந்து உருகுகின்றார்.

ஆம்! தோழமை என்பது என்ன? தோழன் தோழன் தான்! தோழனின் தவறுகளைத் தோழன் விமரிசனம் செய்யமாட்டான்; மற்றவர்களிடம் தோழனின் தவறுகளைக் கூறமாட்டான். தோழன் தவறுகளுக்குத் தண்டனை தரமாட்டான்; துச்சமாக நினைக்கமாட்டான்; உபதேசம் செய்யமாட்டான்! ஏன் ஒரோவழி துரிசுகளுக்கு உடந்தையாகக் கூடப் போவான். பின் உற்றகாலம் வந்துறி, தாயிற்சிறந்த தயாவுடனும் மருத்துவரின் பரிவுடனும் குற்றத்திலிருந்து தோழனை மீட்க முயற்சி செய்வான். தாம் செய்த துரிசுகளுக்கு எல்லாம் இறைவன் தோழமைநிலையில் உடந்தையாகஇருந்ததை நம்பியாரூரர் நினைந்து நினைந்து உருகிப்பாடுகின்றார். திருவாரூர் தொழும் விருப்பம் கனிந்து மேலோங்குகிறது.

ஒருநாள் திருவொற்றியூர் இறைவனை வணங்கிக் கொண்டு, திருவொற்றியூர் விட்டகன்று திருவாரூர் செல்லும் பயணத்தைத் தொடங்கினார். திருவொற்றியூரினின்றும் பிரிவதில்லை என்ற

சபதத்தை மறந்தார்; சபதம் வேலை செய்தது. கண்கள் இரண்டும் ஒளி மழுங்கின; ஒளி குறைந்தன. செய்வதறியாது சுந்தரர் மூர்ச்சித்து நின்றார்; திகைத்தார். சபதத்தால் இது நிகழ்ந்தது என்று உணர்கின்றார். எந்தநிலையிலும் சிவமே தனித்துணை! நம்பியாரூரர் உடன் பாடத் தொடங்குகின்றார். இத்தருணத்தில் பாடிய திருமுறைப் பாடல்கள் அற்புதமானவை.

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

(ஏழாந் திருமுறை 550)

"இறைவா! திருவொற்றியூர் உறையும் இறைவா! கிராமப்புறங்களில் ஆட்டுப்பால் கறப்பார்கள். அப்போது அந்தப் பாலில் ஆட்டுப் பிழுக்கை விழுந்து விடும். ஆட்டுப்பிழுக்கை விழுந்தமையின் காரணமாக அந்தப் பாலை யாரும் தூக்கி ஊற்றி விட மாட்டார்கள். பாலில் விழுந்த பிழுக்கையை எடுத்து எறிந்து விட்டுப் பாலைப் பயன்படுத்துவார்கள். இதுவே உலக வழக்கு! அது போல் ஒற்றியூர் இறைவா, நீ ஏன் எனக்கருள் செய்யக்கூடாது? அழுக்குடம்புடன் உன்சந்நிதி அடைந்தேன். நான்பிழைகள் செய்தது, செய்வது உண்மை. ஆயினும் நின் திருவடியை மறக்கும் பிழையை நான் செய்ததில்லை. வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்தாலும் உன்னுடைய திருநாமத்தை மறந்ததில்லை. ஒற்றியூர் இறைவா! என்னுடைய கண் நோய்க்கு ஒரு மருந்து கூறு!" என்று ஊன் உருக, உயிர் உருகப் பாடியருளுகின்றார் நம்பியாரூரர். உலக வழக்கினை ஒத்தே சிந்திக்கின்றார். நம்பியாரூரர் கண்களை இழந்தது சபதம் மீறியதற்காகத்தான்! ஆனால் நம்பியாரூரரோ சங்கிலிக்காகப் பரிந்து கண்களை இறைவன் பறித்துக் கொண்டதாகக் கூறுகின்றார். மீண்டும் திருவடிப் பிழையா நிலையை எடுத்து வற்புறுத்துகின்றார். இந்தப் பதிகம் முழுதும் உறவும் உரிமையும் இணைந்து குரல் கொடுக்கும் பாடல்கள் தான். கண்ணொளி இழந்தார். ஆனால் ஆன்ம ஒளி இழக்கவில்லை. திருவாரூர் காணும் வேட்கை தணியவில்லை. சாலைவழிச்செல்வோர் வழிகாட்ட திருவாரூர்ப் பயணத்தைத் தொடங்கிவிட்டார். வழியில் திருமுல்லை வாயில் திருத்தலத்தை அடைகின்றார். திருமுல்லைவாயிலில் பாடியருளிய பதிகத்திலும் சங்கிலிக்காக இறைவன் கண்களைப் பறித்துக்கொண்டான் என்றே பாடுகின்றார்.

திருநெடுவெண்பாக்கம் செல்கின்றார். நம்பியாரூரருக்கு ஆற்றாமை மீதூர்கிறது. ஆதலால் நெடுவெண்பாக்கத்தில் பாடிய பதிகத்தில் இறைவனை நோக்கி, "நீர் மகிழ்ந்து கோயிலுக்குள் இருக்கிறீர் அல்லவா?" என்று வினவுகின்றார். இறைவன் திருவுளங்கொண்டு ஊன்றுகோல் ஒன்றருள்கின்றான். ஆயினும் இறைவனிடமிருந்து ஊன்றுகோல் தான் கிடைத்தது. இணக்கமான எதுவும் கிடைக்கவில்லை. பகைவன் போல "உளோம் போகீர்" என்றான். ஊன்று கோல் கிடைத்த மகிழ்ச்சியில் நம்பியாரூரர் "பிழையுளன பொறுத்து அருள்வர்" என்று பாடினார்.

(தொடரும்)

கட்டுப்பாடு

எவன் தனக்குத் தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதன்.

— **மகாத்மா காந்தி**

விஞ்ஞான மேதைகளுக்கு வரவேற்பு

விண்வெளியை மண்ணகத்தே
விரிகடலை ஆராய்ந்து
எண்ணரிய சாதனையால்
இவ்வுலகைப் பொன்னுலகம்
ஆக்கிவரும் விஞ்ஞான
மேதைகளே! அகங்குளிர
வாழ்த்தி வரவேற்கின்றோம்
வருக என அழைக்கின்றோம்!

(குன்றக்குடியில் 6-10-91 இல் நடைபெற்ற 8 ஆவது அறிவியல் கண்காட்சியின் போது அகில இந்திய விஞ்ஞானிகளுக்கு குன்றக்குடித் திட்டக்குழு அளித்த வரவேற்பு)

விவேகானந்தர் அடிச்சுவட்டில்...

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

இந்தியா இன்று ஒரு வினோதமான நாடாகத் திகழ்கிறது. பணப்புழக்கமும் நிறைய இருக்கிறது. அதே போழ்து பணப்புழக்கமே இல்லாத சிற்றூர்களும் உண்டு. பல நூறாயிரங் குடும்பங்களுக்கு இன்று பணப்பஞ்சம் இருக்கிறது. ஏன்? சில நிறுவனங்களும் கூடப் பணப் பற்றாக்குறையால் இடர்ப்படுகின்றன. நல்ல நோக்கமும் செயற்பாடும் இருந்தாலும் நிறைவேற்ற நிதி ஆதாரங்கள் இருப்பதில்லை; நிதி கிடைப்பதில்லை. நிதிப்பற்றாக்குறை என்பது ஒரு கடுமையான பிரச்சனை. இந்தப் பணப்பற்றாக்குறை இயற்கையானதா? அல்லது நிர்வாகக் கோளாற்றால் அமைந்ததா? பணப்பற்றாக்குறை இயற்கையாக அமையாது. இயற்கையாக அமைவது ஏழ்மை. பணப்பற்றாக்குறை என்பது ஏழ்மையல்ல.

இந்தப் பணப்பற்றாக்குறையினால் இடர்ப்படும் நிறுவன நிர்வாகத்தில்கூட மனிதச்சிக்கல்களும் தோன்றும். செய்யவேண்டியன வற்றைச்செய்ய இயலாது. சிலர் பணப்பற்றாக்குறைக்காகச் செலவைச் சிக்கனப்படுத்த எண்ணுவர். வரவுக்கேற்பச் செலவு செய்யும் குணம் இது. நல்ல குணம்தான். ஆனாலும் வளரும் நாட்டுக்கும் நிறுவனத்திற் கும் இந்தக் கொள்கை ஒத்துவராது. அதுமட்டும் அல்ல. வளர்ச்சியைக் கடுமையாகப் பாதிக்கும். அதனால்தான் திருவள்ளுவர், பொருளிய லைக் கூறும் பொழுது,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்று கூறினார்.

இயற்றல் என்றால், பொருள்வருதலுக்குரிய — பொருள் ஈட்டுதற் குரிய புதிய புதிய வாயில்களைக் காணுதல் என்பது கருத்து. அதாவது பொருள் ஈட்டத்துக்குரிய அறிவு, ஆற்றல், பொருள் ஈட்டுவதற்குரிய வாயில்கள், செல்வ உற்பத்திக்களங்கள் எல்லாம் இருந்தும் புதிய பொருள் வருவாய்க்குரிய வாயில்களை உருவாக்காமல், பொருளை ஈட்டாமல் சிக்கனப்படுத்துவது நல்லபழக்கமல்ல. நாள் தோறும்

பொருள் வருவாய்க்குரிய புதிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். செயல் செய்து கொண்டேபோனால் பொருளின்தேவை இருக்கத்தான் செய்யும். பொருளின் தேவையே மனிதனை, பொருள் இயற்றும் முயற்சியில் ஆற்றுப்படுத்தும். பொருள் இயற்ற எடுத்துக் கொள்ளும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இதுவே சுவாமி விவேகானந்தரின் அறிவுரை.

"தொண்டுக்குப் பணம் ஒரு பிரச்சனை அல்ல. தொண்டினைத் தொடங்கு; தொடர்ந்து செய்; பொருள்கள் தாமே வரும்" என்றார் சுவாமிவிவேகானந்தர்.

அறிவு என்பது ஆற்றைப் போன்றது. அது எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சந்தடியின்றி அமைதியாக இருக்கும்.

— **பேகன்**

CECRI விஞ்ஞானிகளுக்கு வரவேற்பு

கோயில் தெய்வம் போல்வந்து
குன்றக் குடியின் கதவுதட்டி
வாயில் புகுந்து தாய்போல
வளமார் அறிவுப் பாலூட்டிச்
சேய்கள் எம்மை வளர்த்துவரும்
"சிக்ரி" அறிவியல் மேதைகளே'
தூயஅன்பு மன மலர்கள்
தூவி அழைத்தோம் வருகவே!

(குன்றக்குடியில் 6-10-91 இல்நடைபெற்ற8ஆவது அறிவியல் கண்காட்சியின்போது விஞ்ஞானிகளுக்கு குன்றக்குடித் திட்டக்குழு அளித்த வரவேற்பு)

ஆறுமுகன் சந்நிதிக்குத் தூதுவிட்டோம்!

(என். சிதம்பரராமலிங்கம்)

ஞானத்தின் திருஉருவே! நான்மறையின் தனித்துணையே!
வான்பொய்த்த நாட்டிலின்று வளம்கொழிக்க வழிநடந்தாய்!
சீராக மக்களிங்கே சிறப்போடு வாழ்ந்திடவே
பேராளன் ஆற்றும்பணி பெருமாளின் திருப்பணியே!

தேனருவி திசையெழும்பி செண்பக தேவியானாள்
பொங்குமாகடல்சேர்ந்து பொன்கரத்தால் தூவிடவே
குற்றால அருவியாகக் குளுமையிங்கே சேர்த்துவிட்டாள்
சிற்றாறாய் உருவெடுத்துச் செந்நெல் செழிக்கவைத்தாள்
நமக்கோ செழித்திருக்கும் மலையுமில்லை! வலுவாக
மழையுமில்லை!

நிலமகளின் நிலவறையில் நீரூற்று நிரம்பஉண்டு!
விஞ்ஞான உத்திகொண்டு இருக்குமிடம் கண்டபின்னே
ஆழமாய்த் துளைசெய்தே அனைத்துநீரும்
வெளிக்கொணர்வோம்!
குற்றால அருவியெனக் கொட்டுகின்ற நீர்கிடைத்தால்
பொட்டலெல்லாம் பூத்துநிற்கும்! பட்டதுயர் பறந்துவிடும்!

தரிசுநிலம் மேம்படவே தனிமுயற்சி எடுத்துவிட்டாய்!
பணியாளர் அனைவரும் பாங்கோடு துணைநிற்பார்!
நீரூற்றுக் கிடைத்துவிட்டால், நிலமெங்கும் பசுமைஉண்டு.
காடுமேடு கழனியாக்கக் கண்டுமுதல் பெருகிடவே
நீயெடுக்கும் முயற்சிஇன்று நிகரில்லாப்பெருமுயற்சி
ஆமாம்! காந்தியண்ணல் பிறந்தநாளில் அவர்நினைவை
எண்ணிடுவோம்!
கிராமங்கள் செழிக்கவேண்டும்; இன்பங்கள் பெருகவேண்டும்!
காந்திமகான் கனவனைத்தும் கண்டிப்பாய் நிறைவேறும்
குத்சியா காந்தியின்று கூர்மையாய் வழிகாட்ட
காந்திமகான் கனவனைத்தும் கண்டிப்பாய் நிறைவேறும்:

வட்டாரம் வளர்த்திடணும் வாழ்க்கைத்தரம் உயர்ந்திடணும்
பொட்டலெல்லாம் பூத்திடணும் புதுமாரி பொழிந்திடணும்
மழைபெற்ற வரவாலே மானாவாரி நிலமெல்லாம்
தழைத்தோங்கி வளர்ந்திடணும் தரமாக மாறிடணும்
குன்றக்குடி முருகனிடம் குறையனைத்தும் சொல்லிவிட்டேன்!
அடிகளாரின் உருவில்அவன் அனைத்துதவி செய்திடுவான்

அடிகளாரின் பார்வையிலே ஆறுமுகன் அருள்கிட்டும்!
நெடியதொரு வேண்டுதலை நிறைவேற்றி வைக்கவேணும்!
கடிதாக மழைபொழிந்து காடுகரை செழித்திடவே
அடிகளாரின் திருமுன்னர் ஆறுமுகன் சந்நிதிக்கே
தூதுவிட்டோம்! துதித்துநின்று வழிபட்டோம் இந்த நாளில்!

(குன்றக்குடியில் 2-10-91 இல் நடைபெற்ற குன்றக்குடித் திட்டக் குழு 14 ஆம் ஆண்டு விழாவில், சிவகங்கை, வேளாண்மைப் பொறியியல், செயற்பொறியாளர் என். சிதம்பர ராமலிங்கம் அவர்கள் இயற்றிப் படித்த கவிதை)

இருளும் ஆணவமும்

ஆணவம் இருளனையது. இல்லை, இல்லை! ஆணவம் இருளைவிடக் கொடியது. இருள் தன்பாற்பட்ட பொருள்களை மறைக்கும். ஆனால் இருள் உயிர்கள் பார்வையிலிருந்துதப்பாது; மறையாது. ஆனால், ஆணவம் உயிர்களின் அறிவையும் மறைக்கிறது. தன்னையும் மறைத்துக்கொள்கிறது. ஆதலால் மறைவாக இருந்து துன்பம் செய்யும் ஆணவமே கொடிது.

ஆணவம் இயல்பாகவே உயிரைப் பற்றி நிற்பது. உயிர்கள் மீது ஆணவத்தின் தாக்குதல் இருக்கும் பொழுது உயிர் அறிவு இழந்து சிறுமையுற்று முடங்கிக் கிடக்கிறது; முடங்கிய நிலையில் இருக்கிறது. உயிர் கடவுட் சார்பை உணர்ந்து கடவுளைச் சார்ந்து ஒழுகத் தலைப்படும் பொழுது ஆணவம் செயலற்று விடுகிறது, ஒளியின் முன்னே இருள் செயலற்றுப் போவது போல!

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

சென்னை CLRI இயக்குநர்
திரு ஜி. தியாகராசன் அவர்கள்
குன்றக்குடியில் 6-10-91 இல் நடைபெற்ற
CSIR பொன்விழா அறிவியற் கண்காட்சியை
திறந்து வைத்து ஆற்றிய உரை

டாக்டர். ரங்கராஜன் அவர்களே! தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களே! திருமதி காந்தி அவர்களே, மற்றும் அறிவியல் அறிஞர் பெருமக்களே! நண்பர்களே! இந்த அறிவியல் கண்காட்சியைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். காரணம், அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் கிராமமக்களுக்கு எடுத்து செல்லும் முயற்சியில் இது ஒரு மைல்கல் என்பது எனது கருத்து.

மகாத்மா காந்தி அவர்கள் இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்று சொல்லுவார்கள். எத்தகைய அறிவியல் மாற்றங்களும் அல்லது தொழில் நுட்பங்களும், இந்திய கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்படாவிட்டால் அத்தகைய தொழில் நுட்பங்களினாலும் அறிவியலாலும் பாரதத்திற்கு பயன் இல்லை என்றே சொல்லிவிடலாம்.

கிராம அறிவியல் என்று சிந்திக்கும் பொழுது இரண்டுவித கருத்துக்கள் என் மனக்கண்முன் தோன்றுகிறது. ஒன்று கிராம மக்களுக்கு நவீன தொழில்நுட்பங்களையும் அறிவியல் நுணுக்கங்களையும் அவர்கள் அறிந்த மொழியில் அவர்களிடம் கொண்டு செல்வது. மற்றொன்று அவர்களிடம் பெருகி இருக்கும் ஆக்க சக்தியை அறிவியலின் துணை கொண்டு மிளிரச் செய்வது. இவ்வகையான கண்காட்சிகள் இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றும்என்றுநான்கருதுகிறேன். கிராமமக்களுக்கு அறிவியலைக் கொண்டு செல்லும் பொழுது அவர்களின் தேவைகள் என்ன? என்று அறியும் வாய்ப்பு கிடைக்கிறது. அறிவியல் உணர்வு அவர்களிடத்தில் தோன்றும் பொழுது தாங்கள் வாழும் சமுதாயத்திற்கு அறிவியலின் துணை கொண்டு சிறப்பாக எப்படி தங்களால் செயல்பட முடியும் என்று அவர்களைச் சிந்திக்க வைக்கிறது.

எந்த ஒரு வளர்ச்சியடைந்த நாட்டின் முன்னேற்றத்தின் ரகசியமும் அவர்களின் அறிவியல், மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியே யாகும். பரந்து விரிந்த நம் பாரத

நாட்டு மக்களின் பொருளாதாரம் அறிவியலும் தொழில் நுட்பமும் இன்றி வளர்ச்சியடைய முடியாது என்று கண்ட நம்பாரத சிற்பி நேரு CLRI மற்றும் CECRI போன்றபெரிய ஆராய்ச்சிக்கூடங்களை நாடெங்கிலும் நிறுவுவதற்கு வித்திட்டார். இத்தகைய ஆராய்ச்சிக்கூடங்களை நாட்டுவதின் நோக்கத்தை 1948 இல் CECRI யின் அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய பண்டித நேரு இவ்வாறு கூறினார். ''அறிவியலையும் மனித நலத்தையும் இணைப்பது தான் நமது நாட்டு மக்களின் பல பிரச்சினைகளை தீர்க்க உதவ முடியும்''. இவை இரண்டும் வேறுபட்டு இருந்தால் அறிவியலுக்கும் நன்மையில்லை. அதை சார்ந்து வாழும் மக்களுக்கும் பயனில்லை. பண்டித நேரு அறிவியலை குறிப்பிட்டுப் பேசும் பொழுது, மக்களிடம் மறைந்து கிடக்கும் ஆக்க சக்தியை வெளிக் கொண்டு வருவதற்கு மகத்தான சக்தி என்றார். அதே CECRIயின் கட்டடத் திறப்புவிழாவிற்கு உரை ஆற்ற வந்த Dr.ராதாகிருஷ்ணன் அவர்கள்''மனித நலன்என்றநமது குறிக்கோள். அறிவியலும் தொழில் நுட்பமும் இன்றி நிறைவேறாது', என்று குறிப்பிட்டார். மனித நலன் என்ற நமது குறிக்கோள் நிறைவேற நமக்குத் தேவையான அறிவியலையும் தொழிற் நுட்பத்தையும் யார் கொண்டு வருவார்கள். வெளியில் இருந்துயாரும் கொண்டு வரமாட்டார்கள். ஏனெனில் இந்த மக்களின் தேவைகள் அவர்களுக்கு தெரியாது. அறிவியலையும்தொழில் நுட்பத்தையும் அறிந்த, தெரிந்த அறிவியல் அறிஞர்களை இந்த மண்ணே விளைவிக்க வேண்டும். அவர்கள் மூலமாக ஒரு அறிவியல் புரட்சியை அதன் மூலமாக ஒரு பொருளாதார மாற்றத்தை நாம் காண வேண்டும்.

இவ்வகையான ஒரு அறிவியல் புரட்சி குன்றக்குடியில் நமக்கு கண் முன்னால் நிகழ்ந்துள்ளது. இதற்கான பெருமை முழுக்க முழுக்க குன்றக்குடி அடிகளாரைச் சேரும். கிட்டதட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பாக நான் அசாமில் இருக்கும் ஜொர்காட்டில் இயக்குநராகப் பணியாற்றிய பொழுது அடிகளார் அங்கு என்னை காண வந்திருந்தார். ''குன்றக்குடிக்கு தங்கள் அறிவியல் என்ன செய்ய முடியும்'' என்று வினவிய அவர் எத்தனை தொழில் நுட்பச் செயல் முறைகளை தம் மக்களுக்கு எடுத்துச் செல்ல முடியுமோ அத்தனையும் எடுத்துச் சென்றார்.

பிறகு நான் ஹைதராபாத்தில் அமைந்திருக்கும் RRL இன் இயக்குநராகப்பொறுப்பேற்ற பின்பும் அடிகளார் என்னைத் தொடர்ந்து RRLக்கும்வந்தார். மறுபடியும் தம்மக்களுக்காகத் தொழில்

நுட்பங்களைத் தேடி எடுத்துக் கொண்டு சென்றார். இப்பொழுது நான் இயக்குநராக இருக்கும் CLRIயிலும் குன்றக்குடிமக்களுக்கு தேவையான நவீன தொழில் நுட்பத்தைத்தயாரித்த வண்ணம்இருக்கிறோம். ஒரு தனி மனிதர் எவ்வளவு மகத்தான அறிவியல் மாற்றத்தை, பொருளாதார மாற்றத்தை சமூக மாற்றத்தை செயல் படுத்த முடியும் என்பதற்கு இது ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. இன்று குன்றக்குடியை ஒரு எடுத்துக்காட்டான அறிவியல் தொழில் நுட்பக் கிராமம் என்று சொல்கிறோம். அண்ணாமலைப் பல்கலை கழகம் இவ்வகையான பணிகளுக்கு அடிகளாருக்கு விருது கொடுத்து கவுரவித்து இருக்கிறது. அடிகளாரின் தொண்டில் நான் வியந்து நோக்கியது, இன்று குன்றக்குடியில் ஏற்றுமதியாகும் தரமுள்ள செல்களை உற்பத்தி செய்பவர்கள் எட்டாவது வகுப்பைக்கூட தாண்டாத இளைஞர்கள் என்பதுதான். இந்த வெற்றிக்கு மூல காரணம் குன்றக்குடி அடிகளார் மற்றும் CECRIயின் விஞ்ஞானிகளின் அயராத மூயற்சி மட்டுமல்லாமல் அறிவியல் இந்த கிராமத்தை தன் தமிழ்க்கரத்தால் தீண்டியதுஎன்று தான் கூற வேண்டும். தாய்மொழியில்அறிவியல் தொழில்நுட்பத்தை மக்களுக்கு அளித்தால் எவ்வகையான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதற்கு இதுவே ஒரு தலைசிறந்த உதாரணம்.

கிராமத்து அறிவியல் என்று பேசும் பொழுது மத்திய மின்வேதியற்கூடம் என்றழைக்கப்படும் CECRIயை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. குன்றக்குடி அடிகளாருடையதளராமுயற்சிக்கு அயராது பாடுபட்டனர், பாடுபட்டு வருகின்றனர் CECRIயின் அறிவியல் அறிஞர்கள். இது போல ஒவ்வொரு CSIR ஆராய்ச்சிக்கூடமும் அருகில் அமைந்த கிராமங்களின்தொழிற்வளர்ச்சிக்குத்தனது தொழிற்நுட்பங்களைத்தயாரித்துத் தருமானால் இருபத்திஒராம் நூற்றாண்டின் ஒரு ஒளி மயமான எதிர்காலத்திற்கு நமது மக்களை நம்மால் இட்டுச் செல்ல முடியும். இதேவகையான அறிவியல்புரட்சி வேறு விதத்தில் வடஆர்க்காடு மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது. ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக தோல் பதனிடுதல் ஒரு குறிப்பிட்ட சாதிக்குஉரிய தொழில் என்று நமது சமுதாயம் ஒதுக்கி வைத்தது. ஆனால் CLRI யின் அயராத முயற்சியின் விளைவாக இம்மக்களுக்கு நவீன தொழில்நுட்பத்தைக் கொடுத்துவந்துள்ளோம். இன்று அறிவியல் தொழில் நுட்ப மாற்றங்களினால் பொருளாதார நிலையில் உயர்ந்த அந்த மக்களை அவர்களைப் புறக்கணித்த சமுதாயம் ஏற்றமிகு மக்களாய் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அறிவியலும் தொழில் நுட்பமும் அடிமட்ட மக்களைச்சென்று அடைந்ததினால்

ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

உண்மையாகவே அறிவியல் நமது கிராமங்களில் ஊடுருவி அநேக ராமன்களையும் ராமானுஜன்களையும் கண்டுபிடித்துத் தர வேண்டும் என்பது எனது ஆவல். அத்தகைய இளைஞர்களின் மனித சக்தியை உயர்த்திக் காட்டிடத் தூண்டுகோலாய் அடிகளார் போன்று அநேக தலைவர்கள் உருவாக வேண்டும் என்பது எனது பேராவல். நிச்சயமாக அறிவியலும், தொழில் நுட்பக் கருத்தினையும் எடுத்துக் காட்டும்இவ் வகையான கண்காட்சிகள் அநேக இளைஞர்களின் ஆக்க சக்தியை வெளிக்கொண்டு வரும் நெம்புகோலாகச் செயல்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த உரையை நான் தமிழில் அளிக்கக் காரணம், அறிவியல் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற எனது கருத்து, மக்களுக்கு முதலில் சென்றடைய வேண்டும் என்பது தான்.

அறிவியல் மேதைகளைஇந்த மண் நிச்சயம் விளைவிக்கும் அதற்கான ஊக்கத்தை எம் போன்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் கொடுக்கும். ஏனெனில் 4,000 வருடங்களாக நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் நமது மொழி மற்றும் சுகாதாரம் நம்மை நிச்சயமாக மற்ற நாடுகளோடு உயர்த்தும்; வாழ வைக்கும். இந்த அறிவியல் கண்காட்சியை நிறுவிய அனைவருக்கும் CLRI சார்பிலுக CSIR சார்பிலும் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் கடவுள் நம்பிக்கையில் வாழத் தலைப்பட்ட பிறகு, நெறிமுறைகள் தோன்றின. நெறிமுறைகள் சமயங்களாகஉருப்பெற்றன. சமயநெறிகள்வாழ்வியலைத் தழுவியவையாகஇயக்க நிலையில் இருந்தவரையில்மனித குலம் அதிகப் பயன்பெற்றது. பின்காலப்போக்கில் சமயங்கள் நிறுவனங்களானபிறகுஅவற்றின்உயிர்ப்பாகஇலங்கிய மனிதநேயமும் தொண்டும் அளவால் குறைந்து விட்டன. மாறாக, மனித உலகத்திற்குத் தீமையையும் தரக்கூடிய நிலையில் திசைமாறிவிட்டன.

(அடிகளார் அவர்களின் மெய்கண்டார் விழா (20.10.90) முதன்மையுரையில் இருந்து)

தாழ்த்தப்பட்டோர் யார்? பிற்பட்டோர் யார்?

திருக்குறள் பேரவை மாநிலப் பொதுக்குழுத் தீர்மானம்

நாள் :- 19.11.89 -மதுரை

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

சமுதாயம் என்பது ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் என்ற கொள்கை வழி உருக்கொள்ளும் அமைப்பாகும். இக்கொள்கை வழி அமைந்த சமுதாய அமைப்பில் இன, சமய சாதி, குல, கோத்திர வேற்றுமைகள் இருக்க நியாயமில்லை. இருக்கக்கூடாதுஎன்பது திருக்குறள் நெறி. பிறப்பிலேயே சாதி வேற்றுமைகளையும் இழிவுகளையும் சிறப்புத் தகுதிகளையும் படைத்துத் தந்துள்ள பிற்போக்கு வழக்கை மறுக்கிறது பொதுமறை. திருக்குறள் சாதி வேற்றுமை,இன வேற்றுமை, நிறவேற்றுமை, அவ்வழி ஒதுக்கல் ஆகிய அனைத்துச் சமுதாயத் தீமைகளையும் முற்றாக மறுக்கிறது. எல்லா உயிர்களும் பிறப்பில் ஒத்த உரிமை உடையன; பிறப்பின் காரணமாக சிறப்பும் இல்லை; இழிவும் இல்லை; உயிர்கள் முயன்று பெறும் பெருமை உண்டு என்று திருக்குறள் கூறுகிறது. இந்த முயற்சியினால் அடையும் பெருமையைக் கூட ஒருவர் உரிமையாக, அதாவது மற்றவர்கள் தாழ்ந்தவர்கள்என்றஎண்ணப் போக்கு உருவாக்கக்கூடிய உரிமையாக சிறப்பு உரிமைகளையும் தகுதிகளையும் - கோரிப் பெறுதல் கூடாது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது திருக்குறள். ஆதலால் இந்தப் பொதுக்குழு மக்கள் மன்றத்தில் நிலவும் இனவேற்றுமை, நிறவேற்றுமை, சாதி வேற்றுமை முதலியவைகளை முற்றாக வெறுக்கிறது. இது மட்டுமின்றி பிறப்பின் அடிப்படையில் பொருளியல் வாய்ப்பு வசதிகளில் கூட வேற்றுமை இருத்தல் கூடாது. எல்லாருக்கும் சம வாய்ப்புகள் இருக்கவேண்டும் என்றும் திருக்குறள் கூறுகிறது. வேறுபாடுகள் இல்லாத ஒருமைப்பாடுடைய சமுதாயத்தை அமைப்பதே திருக்குறள் பேரவையின் குறிக்கோள். சாதி வேற்றுமையைச் சமுதாயத்தில் வளர்க்க நினைக்கும் ஒரு சில மத, கலாச்சார சக்திகளைத் தக்கவாறு சந்தித்து அவைகளை மக்கள் மன்றத்திலிருந்து விலக்கித்

தனிமைப்படுத்துவது என்று பேரவை தீர்மானிக்கிறது. இந்த மாநிலப் பொதுக்குழு இன, சாதி சமய வேறுபாடுகள் பாராட்டும் மனப்பான்மையிலிருந்து விடுதலை பெற்று ஒரு குலம்காண முன்வரும்படி மனித குலத்தை அழைக்கிறது. அரசியற் கட்சிகள் நாட்டை நலிவுறச் செய்யும் சாதி மனப்பான்மைகளைக் கட்சி வளர்ச்சிக்கும் தேர்தல் வெற்றிக்கும் பயன்படுத்தாதிருக்கும்படி இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது. அரசுகள் சாதி இன, சமய வேற்றுமைகள் வளராமல் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். மனித குலத்தில் வேற்றுமைகளைத் தூண்டும் இயக்கங்களின் மீது நடவடிக்கை எடுத்து ஒடுக்க வேண்டும். சாதிகளற்ற சமுதாயத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது சமுதாயத்தில் முந்தைய வரலாற்று நிகழ்வுகளின் காரணமாக தாழ்த்தப்பட்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்டிருக்கின்ற சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்குத் தடை ஏற்பட்டுவிடக்கூடாது. சமுதாய நடைமுறைகளால் நலிந்துபின்னடைத்திருப்பவர்கள் வலிவுடையவர்களுடன் சம நிலையில் போட்டிபோடும் தகுதியினை இழந்திருப்பார்கள். ஆதலால் நலிந்தவர்கள் வளர்ந்தவர்களோடு வளர்ந்து வந்து சமநிலையில் நிற்கும் வரை தகுதி, திறமை என்று பேசுவது சமூக நியாயத்தில் வழிப்பட்ட பேச்சு ஆகாது. வளராதவர்கள் வளரவழி தேவை. இத்தகைய ஒரு வழிதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கை. ஆதலால் தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய சமுதாய அமைப்புகளுக்கு உரிய ஒதுக்கீடுகள் நியாயமானவையே இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை முறையை இது வரை நடைமுறைப்படுத்திவந்திருப்பதும் நியாயமே எனினும் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்ற விலக்குப்பாதை நிலையானதாகி விடக்கூடாது. இட ஒதுக்கீட்டு முறை பழக்கமாகி, வழக்கமாகி இட ஒதுக்கீடு இல்லையென்றால் வாழமுடியாது என்ற நிலை உருவாகிவிடக் கூடாது. இந்த நிலை மிகவும் தீமை பயக்கும். ஆனால் இப்போது இட ஒதுக்கீட்டுக் கொள்கை சாதிமுறையில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த முறையே தொடர்வது சமச்சீரான வளர்ச்சிக்குத் தடையாகும் என்பது இன்றைய நிலையை ஆராய்ந்து உணர்பவர்களுக்குப் புலனாகும் உண்மையாகும். சமுதாயத்தில் எந்தப் பிரிவினரும் நூற்றுக்கு நூறு பின்தங்கியவர்களாக இருக்க மாட்டார்கள்; இருந்ததும் இல்லை.

இட ஒதுக்கீட்டுச் சலுகைகளைப் பெற சாதி மட்டும் அளவுகோலாக அமைந்து இருப்பதால் தாழ்த்தப் பட்ட, பின் தங்கிய சாதியில் இருக்கும் முன்னேறியவர் களே இந்தச் சலுகையை அடைந்து அனுபவிக்கிறார்கள். உண்மையில் பின்தங்கியவர்க்குச் சலுகைகள் சென்றடைவதில்லை. இத்தகு நடைமுறையில் மிகவும் பின்தங் கியவர்கள், மிகவும் பின்தங்கிய வர்களாகவே வாழ்ந்து வருகின் றனர். எனவே இந்த இட ஒதுக் கீடுகளுக்குச்சாதி அடிப்படையில் இலக்கணம் வகுக்காமல் தகுதி நிலையில் இலக்கணம் கண்டு நடைமுறைப்படுத்துதல் நல்லது. ஆதனால் இப்போது நடைமுறை யிலுள்ள நியாயமற்ற தன்மையை மாற்றி, சமூக நீதியை நிலை நாட்டித் திருக்குறள் பேரவை அடியிற்கண்டுள்ள விதிமுறை களைத்தமிழ்நாடு அரசுக்கும்மைய அரசுக்கும் பரிந்துரை செய்கிறது.

1. சமுதாய அமைப்பில் தீண்டத் தகாதவர்களாக வாழ்பவர்கள்:

   சமூகத்தின் அங்கீகாரம் பெறாது ஒதுக்கப்பெற்ற நிலையில் (தீண்டத்தகாதவர் களாக) வாழ்பவர்கள்.

2. கல்வியில் பின்தங்கிய நிலை
3. பொருளாதாரத்தில் பின்தங் கிய நிலை

என்ற இவ்வகைகளில் பின்தங்கிய வர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக கருதப்பெற வேண்டும். இந்த பிரிவினர் அரசின் உதவிகளைப் பெறுதற்குரிய முதற்பிரிவினர்.

கல்வியிலும் பொருளாதாரத் திலும் பின்தங்கியவர்கள் அரசு உதவிகள் பெறுதலுக்குரிய இரண்டாம் பிரிவினர்.

கல்வியிலோ பொருளாதாரத் திலோ இரண்டில் ஒன்றில் பின் தங்கியவர்கள் அரசு உதவி பெறு தலுக்குரிய மூன்றாவது பிரிவினர்.

சிறந்த கல்வி பெறுவதில் பரம்பரையும் சூழ்நிலையும் முக்கிய பாத்திரத்தை வகிக்கின் றன என்பது கல்விச்சிந்தனை யாளர்கள் கருத்து. பலநூறு ஆண்டுகளாகக் கல்வி பெறுவதற் குரிய வாய்ப்பை இழந்த குடும்பங் கள் உள்ளன. கல்வி பெறாதவர் கள் வாழும்சூழ்நிலையும்கல்விக்கு எதிர்மறைதான் என்பதை விளக் கிக்கூற வேண்டியதில்லை. ''பேரனைத் திருத்த வேண்டு மானால் பாட்டியைத் திருத்த முயற்சி செய்ய வேண்டும்'' என்பது பழமொழி. ஆதலால் மூன்று தலைமுறைகள் தொடர்ச் சியாகப் பட்டப்படிப்புப் பெற்றுப் பட்டதாரிகள் உருவாகாத குடும்பம் கல்வியில் பின் தங்கிய குடும்பமாகக் கருதப்பெறும். இத் தகைய குடும்பங்களுக்குக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடும் தேர்வுக்குரிய மதிப்பெண்கள்

பெறுவதில் சலுகையும் வழங்க வேண்டும். இவர்களுடைய கல்வித் தரத்தைத் கூட்டதனி முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் இருபதினாயிரத்து (ரூ.20,000 -) க்கும் குறைவாக வருவாய் உடையவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகக் கருதப் பெறுவர். இந்த வரையறை ஆண்டு தோறும் பணப்புழக்கத்திற்கு ஏற்றவாறு திருத்தியமைக்க வேண்டும். அதுபோலவே ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தில் குறைவாக உடையவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக எண்ணப் பெறுவர். (இதற்கு உடைமை அளவையே எடுத்துக் கொள்ளவேண்டும். வருவாயைக் கணக்கிடுதல் அவசியமில்லை. அதுபோலவே வருமானவரி, விற்பனைவரி கட்டுகிறவர்களையும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் அல்லர் எனக் கொள்ளவும். வருமானவரி விற்பனை வரியில் சிலர் பொய்க் கணக்குகளைக் காட்டி ஏமாற்றலாம். மிகச் சிலரே செய்ய இயலும். இதைச் சிறந்த நிர்வாக அமைப்பில் திருத்தம் காணலாம். வேற்றுமை, சாதி அமைப்பு முறையில் வரும் தீமையை நோக்க இது பரவாயில்லை எனலாம். சிறு வியாபாரத்திற்கும் சலுகை வழங்கலாம். இது தொழில் உரிமத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படலாம்.)

இந்த அடிப்படையில் முன்னேற்றத்திற்குரிய பிற உதவிகள் படிப்பதற்குரிய இட ஒதுக்கீடுகள் வேலை வாய்ப்புக்குரிய இடஒதுக்கீடுகள் அனைத்தும் செய்து, அவரவர்மேம்பாட்டுக்குரியஉதவிகளை, குடும்ப அடிப்படையில் காலக் கெடு நிர்ணயித்துக் செய்து ஒத்த நிலைக்கு உயர்த்திக் கொண்டு வருமாறு இந்தப் பொதுக்குழு அரசுகளைக் கேட்டுக்கொள்கிறது. மேலும் சாதிகளின் பெயரால் நிறுவனங்கள் தோன்றாமலிருக்க வழிவகை காணுமாறு மக்கள் மன்றத்தையும் அரசுகளையும் கேட்டுக்கொள்வதுடன் சாதிப்பெயரால் அமையும் நிறுவனங்களுக்கு அரசு உரிமம் வழங்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறது.

மனித குலத்தை வருத்துவது சாதி வேற்றுமை மட்டுமின்றி. செய்யும் தொழிலால் ஏற்படும் வேற்றுமைகளாலும் சிலர் உயர்வாகவும் சிலர் தாழ்வாகவும் நடத்தப்படும் கொள்கைக்குத் திருக்குறள் உடன்பாடுடையதன்று. செய்யும் தொழிலின் காரணமாக ஒருவர் சிறப்பைப் பெறுவதோ இழிவைப் பெறுவதோ கூடாது

என்பது திருவள்ளுவர்கொள்கை. அவரவர் தகுதிக்கேற்பத் தொழில் அமைகிறது. ஆதலால் எந்தத் தனிச்சிறப்பையும் பெற்று சமுதாயத்திலிருந்து விலகி, ஒதுங்கி உயர்தல் அல்லது உயர்த்திக் கொள்ளுதல் கூடாது என்று திருக்குறள் கூறுகிறது. "சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்பது திருக்குறள். ஆக, பிறப்பின் அடிப்படையிலும் சரி, தொழிலின் அடிப்படையிலும் சரி ஒருவர் உயர்ந்தவர் ஒருவர் தாழ்ந்தவர் என்பது கூடாது என்ற சமுதாயக் கொள்கையை இப்பேரவை மக்கள் மன்றத்தில் வைத்து வழி நடத்துவதுஎனவும், அரசியல் முதல் ஆண்டவன் சந்நிதி வரை எங்கும் தீண்டாமையில்லாத ஒரு குல உணர்வை வளர்க்கப் பாடுபட வேண்டும் எனவும் இப்பொதுக்குழு உறுதி கொள்கிறது.

வரலாற்று நிகழ்வுகளின் காரணமாகத் தாழ்த்தப்பட்டவர்களாகவும் ஒதுக்கப்பட்டவர்களாகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் ஆக்கப்பட்டவர்கள் உயர் சமுதாயத்தினருடன் எல்லாத் துறைகளிலும் ஒத்து உயர்ந்து விளங்குகின்ற வகையில் அரசு செய்யும் உதவிகளைத் தொடர்ந்து செய்து அவர்களை வளர்த்து எல்லாரும் சமநிலையினர் என்ற கொள்கையை உறுதிபடுத்தும்படி அரசுகளை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது. சாதி வேறுபாடுகளை முற்றாக நீக்கி "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற சமுதாய அமைப்பைக் காணத் தொடர்ந்து ஈடுபடுவதில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு திருக்குறள் பேரவை உறுப்பினர்களை இப்பொதுக்குழுகேட்டுக்கொள்கிறது.

விளக்கக் குறிப்புகள் :

சமுதாயத்தின் பிரிவுகள் மூன்று

1. தாழ்த்தப்பட்டவர்கள் - சமூதாயத்தினால் அங்கீகரிக்கப் பெறாது ஒதுக்கப்பட்டவர்கள்; (சமூகங்கள்) ஒதுங்கி வாழ்பவர்கள்.
2. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்
3. பிற்படுத்தப்பட்டவர்கள்

ஒருவகையிலும் பின்தங்கிய நிலையில் இல்லாதவர்கள் வளர்ந்த சமுதாயத்தினர். அவர்கள் தகுதி திறமையின் காரணமாகவே பொது இடங்களில் வெற்றி பெற்று வர வேண்டும். இவர்கள் மற்றவர்களுக்குரிய சலுகைகளைக் கேட்பதைத் தவிர்த்து, அவர்களைச் சமநிலைக்குக் கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இம்மூவகைப் பிரிவினரும் சலுகைகளைப் பெறுவதற்குரிய பிரிவினர். இப்பிரிவுகளின் வரிசைப்

படியே முன்னுரிமை வழங்கப் பெறுதல்வேண்டும். இம்மூன்றிலும் அடங்காதவர்கள் வளர்ந்தசமுதாயத்தினர் என்று கருதப்பெறுவது நியாயத்தின் பாற்பட்ட உண்மையே.

இந்தப் பிரிவுகள் இன்று நடைமுறையிலுள்ள பிரிவுகள் அல்ல. ஆதலால் இன்றுள்ள சாதிமுறைப் பிரிவுகளை மறந்து விடுக. இப்புதிய பிரிவுகள் இன்றுள்ள சமூகங்களின் உண்மையான நிலைமையைக்கணக்கில்எடுத்துக் கொண்டுதற்காலிகமாகப் பிரிக்கப் பெறும் பிரிவுகள். இப்பிரிவுகள் நிலையானவையல்ல. காலப் போக்கில் வளர்ச்சியின் காரணமாக இப்பிரிவுகளுக்கு இடையில் மாற்றங்கள் ஏற்படும். அதாவது ஒரு பிரிவு, பிறிதொரு பிரிவுக்கு மாறும். காலப்போக்கில் பிரிவுகளே இல்லாத சமநிலைச் சமவாய்ப்புச் சமுதாயம் தோன்றும். அப்போது இப்பிரிவுகள் இரா. இப்பிரிவுகளே இல்லாத சமுதாயத்தை அமைப்பதன் தொடக்கமே இந்த முயற்சி.

1. தாழ்த்தப்பட்டவர்கள் : சமூகத்தில் தீண்டாமையால் ஒதுக்கப்பட்டிருப்பவர்கள். (தீண்டாமை அவதி நடைமுறையில் இருக்கும் வரை)

2. கல்வியில் பின்தங்கியவர்கள் : ஒரு குடும்பத்தில் மூன்று தலைமுறைகள் தொடர்ச்சியாகத் தலைமுறைக்குகுறைந்தது ஒருவர் வீதம் மூவர் பட்டப்படிப்பு பெறும் வரை.

3. பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் : ஸ்டாண்டர்டுஏக்கர்5(ஐந்து) சொந்தமாக உடைமை அல்லது குடும்ப வருமானம் ஆண்டுக்கு (கணவன்-மனைவி இருவர் வருமானம்) ரூ 20.000/- அடையும் வரை.

1. இம்மூன்று நிலைகளிலும் மூன்றிலும் பின்தங்கியவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள்.

2 கல்வியிலும் பொருளாதாரத்திலும் பின்தங்கியவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்.

3. கல்வியில் அல்லது பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள்.

இந்தப் பிரிவுகள் மூன்றிலும் பின்தங்கியவர்களுக்குக் கல்வியிலும் இட ஒதுக்கீடு மதிப்பெண்களில் சலுகை, உதவித் தொகை ஆகிய அனைத்தும் வழங்கப் பெறுதல் வேண்டும். மதிப்பெண்களில் சலுகை வழங்காமல் இவர்கள் தகுதியைப் பெறத் தக்கவாறு சிறப்புடைய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் ஏற்புடையதே. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும்

பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் எந்த எந்தத் துறையில் அவர்கள் பின்தங்கியிருக்கிறார்களோ அந்த அந்தத் துறையில் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப் பெறுதல் வேண்டும். அதாவது கல்வியில் பின்தங்கியிருந்தால் இட ஒதுக்கீடு மதிப்பெண் சலுகையும் தருதல் வேண்டும். கல்வியில் பின்தங்கியில்லாமல் வளர்ந்து பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு உதவிப் பணம் தர வேண்டும். அரசுப் பணிகளைப் பொருத்த வரையில் பொதுவாக ஒரு குடும்பத்தில் இருவர் அரசிதழ் பணிவுடைய பெரிய பணிபொறுப்பில் இருந்தால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குஅரசுப்பணியில் இட ஒதுக்கீடு செய்யக்கூடாது.

11-10-80 & 20, 21 22-05-88 ஆகிய நாள்களில் வடஆர்க்காடு மாவட்டம் இரத்தினகிரியில் நடைபெற்ற திருக்குறள் பேரவை மாநில மாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தை மேலும் சில விளக்கங்களுடன் அரசுகளுக்கும் பொதுமக்களுக்கும் இப்பொதுக் குழு இவ்வாறு பரிந்துரை செய்கிறது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும்படி திருக்குறள் பேரவையினரை இப்பொதுக் குழு கேட்டுக் கொள்கிறது. ★

பிற்காலத்தில் சமய நெறிகள் தடம்புரண்டு உடைமை, பணம் ஆகியவற்றின் தடத்தில் நடந்து சுரண்டும் சமுதாயத்திற்கு அனுசரணையாக இருந்து வேற்றுமைகளை வளர்த்து இந்தப் புவிக்கோளை இரத்தத்தால் கழுவி நரகத்தைப் படைத்தகொடுமைகளையும் மறந்து விடுவதற்கில்லை.

ஆயினும் இன்னமும் மனிதன் வளர, நம் நாட்டின் சமய ஞானம் துணை செய்யும் துணை செய்யவேண்டும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கை வெற்றிபெற சிந்தனையாளர்கள், செயல் வல்லுநர்கள் துணை செய்யவேண்டும்.

— மெய்கண்டார் விழா அடிகளார் அவர்களின் முதன்மையுரை (16-11-91)

மெய்கண்டார் விழா
மாமன்னன் இராசராச சோழன் விழா

குன்றக்குடியில் 16.11-91இல் ஆதீனக்கொலுமண்டபத்தில்மெய் கண்டார்விழா-மாமன்னன் இராச ராசசோழன்விழா, நடைபெற்றது. குன்றக்குடி ஆதீனமும் பிள்ளை யார்பட்டி சிவநெறிக்கழகமும் இணைந்துஇவ்விழாக்களை சிவா கம, திருமுறை, சைவசித்தாந்த ஆய்வுக்கருத்தரங்காக நடத்தின.

காலை 8 மணிஅளவில் சமய தீட்சை வழங்கப் பெற்றது. பின் காலை 10மணி அளவில்கருத்தரங் கத் தொடக்கவிழா நடை பெற்றது. திரு. ஏ.எம். சம்பந்தமூர்த்தி இறை வணக்கம்பாடினார். சிவத்திரு கி.பிச்சைக்குருக்கள் வரவேற்புரை யாற்றினார். சிவத்திரு ப. மூக்கப் பிள்ளை, மெய்கண்டதேவரின் திரு வுருவப்படத்தைத் திறந்து வைத் தார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொடக்கவுரையாற்றி னார்.

முதலில் சைவசித்தாந்தக் கருத்தரங்கு நடந்தது தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமை வகித்தார். திரு சி.சு.மணி "முடிந்த முடிவு" என்னும் தலைப்பிலும், திரு அ.சொ.சுப்பையா, "தடைஎது?" என்னும் தலைப்பிலும், டாக்டர் ச. கங்காதரன் "அறியும் நெறி" என்ற தலைப்பிலும் கட்டுரைகள் படித்தனர். அடுத்த, திருமுறைகள் ஆய்வுகருத்தரங்கு நிகழ்ந்தது. டாக்டர் சுப. அண்ணாமலை தலைமை ஏற்றார். புலவர் நீ.சீ. சுந்தரராமன்" திருமுறைகளில் திருக்கோயில் வழிபாடு" என்னும் தலைப்பிலும், டாக்டர். பழ. முத்தப்பன், "திருமுறைகளில் திருக்கோயில் தொண்டு" என்னும் தலைப்பிலும் திரு. மா. வயித்திய லிங்கம் "திருவாசகத்தில் திருக் கோயில்" என்னும் தலைப்பிலும் கட்டுரைகள்வாசித்தனர். பிற்பகல் 2.30 மணியளவில் சிவாகமக் கருத்தரங்கு நடைபெற்றது சிவத் திரு எஸ் பாலசுப்பிரமணியக்குருக் கள்தலைமைதாங்கினார்சிவத்திரு கி. ஜம்புநாதக்குருக்கள் "நாள்வழி பாடு, சிறப்புவழிபாடு" என்னும தலைப்பிலும், சிவத்திரு. V. சூட்சும புரீச்சுரக்குருக்கள் 'ஆகமும் ஒரு கடவுள் வழிபாடும்" என்றதலைப்பி லும் சிவத்திரு. கே எஸ் வைத்திய நாதசிவாச்சாரியார் "ஆகமங்களில் மனிதம்" என்ற தலைப்பிலும் கட்டுரைகள் படித்தனர்.

மாலை5மணியளவில்பாராட்டு விழா-நிறைவுவிழா நடைபெற்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிவத்திரு. சி. ஜம்புநாதக்குருக் களுக்கு "சிவநெறிச்செம்மல்"

குன்றக்குடியில்

கூட்டுறவு வாரவிழா

குன்றக்குடியில் 38 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா-வீட்டுவசதி மற்றும் நகர கூட்டுறவு நாள் விழா 20-11-91 புதன்கிழமையன்று நடைபெற்றது. பிற்பகல் 4மணி அளவில்கூட்டுறவு ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலம் ஆதீனத்திருமடத்தில் தொடங்கி மாலை 5 மணியளவில் குன்றக்குடி தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப்பள்ளியைச் சென்றடைந்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் ஏறத்தாழ 2000 கூட்டுறவாளர்களும், பள்ளி மாணவர்களும், பொதுமக்களும் இந்தஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மாலை 5 மணியளவில் தருமைக் கயிலைக்குருமணி மேல்நிலைப்பள்ளி,ஷெனாய் கலையரங்கில் விழா நடைபெற்றது. காரைக்குடி, கூட்டுறவுத் துணைப் பதிவாளர் திரு பி எஸ்.சென்னியப்பன் கூட்டுறவுக் கொடி ஏற்றிவைத்தார். தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின், சிவகங்கை கூட்டுறவு இணைப்பதிவாளர் திரு. இரா. நல்லதம்பி வரவேற்புரையாற்றினார். காரைக்குடி மத்தியமின் வேதியியல் ஆய்வக இயக்குநர் பேராசிரியர் எஸ். கே. ரங்கராஜன் விழாவுக்குத் தலைமை வகித்தார். காரைக்குடிசட்டமன்ற உறுப்பினர் திருமதி. மு. கற்பகம், இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிச் செயலாளர் திரு. கோ. இராமசாமி,சிவகங்கை கூட்டுறவுத் துணைப்பதிலாளர் திரு. எஸ். லெனின்,கல்லல் வட்டாரவளர்ச்சி அலுவலர் திரு. ஆர். கண்மணி, சாக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. எஸ். சம்பந்தம் ஆகியோர்வாழ்த்துரைவழங்கினர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குத்சியா காந்தி இ.ஆ ப., பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆசியுரை வழங்கினார். சிவகங்கை, கூட்டுறவுத் துணைப் பதிவாளர் திரு. வை. கார்த்திகேயன் நன்றியுரையாற்றினார். நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவேறியது. அடுத்து, கூட்டுறவு பற்றியகலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. ★

(21ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பட்டமும் வழங்கிப் பொன்னாடைப் போர்த்திப் பட்டயம் வழங்கிப்பாராட்டினார். அடுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிறைவுரையாற்றினார். நன்றியுரை குப்பின் மங்கலவாழ்த்துடன் விழா இனிதே நிறைவெய்தியது. ★

"மக்கள் சிந்தனை"

திங்கள் இதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	1 வெளியீடு		12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 500/-	ரூ 5000-
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 400/-	ரூ. 4000/-
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ 300/-	ரூ. 3000/-
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ 150/-	ரூ 1500/-

இதழ் கட்டணம்

தனி இதழ்	ரூ. 2-00
ஆண்டுக்கட்டணம்	ரூ. 20-00
ஆயுட் கட்டணம்	ரூ. 200.00

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி

நிர்வாகி

"மக்கள் சிந்தனை"

குன்றக்குடி-623 206